# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **487/2016**

ஆணை எண். **108/2016**

நாள் : **13/06/2016**

**திரு. கே.வி. சின்னசாமி,**
**1/105, பிள்ளையார் கோயில் தெரு,**
**ஜப்திகாரணி கிராமம் (அஞ்சல்),**
**வந்தவாசி வட்டம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

**– முறையீட்டு மனுதாரர்**

**வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

**– எதிர் மனுதாரர்**

**திருவண்ணாமலை மாவட்டம், ஜப்தி காரணி கிராமத்தைச் சேர்ந்த திரு. கே.வி. சின்னசாமி அவர்கள், அவரது கிராமத்தில் உள்ள ஏரிகளில் குத்தகை மூலம் வரும் வருவாயை, கிராம முன்னேற்றத்திற்கு பயன் படுத்துவதற்காக,** தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த முறையீட்டு மனு, 31.05.2016 அன்று பெறப்பட்டு, 487/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆணை

2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், விதி 2(7) இன் படி ‘ உள்ளாட்சி அமைப்பு ’ என்பதற்கான பொருளில் " ஊராட்சி மன்றம் " மற்றும் " ஊராட்சி ஒன்றியம் " என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, முறையீட்டுதாரரின் மனு இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்முறையீட்டு மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களுக்கு தாக்கல் செய்யுமாறு தனியரை கேட்டுக் கொள்ளலாம் என முடிவு செய்து ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

**திரு. கே.வி. சின்னசாமி,**
**1/105, பிள்ளையார் கோயில் தெரு,**
**ஜப்திகாரணி கிராமம் (அஞ்சல்),**
**வந்தவாசி வட்டம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

நகல்

**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்**
**மாட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**